செ.கு.எண்:117 நாள்: 29.10.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 29.10.2015

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், சங்கமங்களம் கிராமம் அருகில், மதுரை – ராமநாதபுரம் நெடுஞ்சாலையில் 26.10.2015 அன்று மானாமதுரையைச் சேர்ந்த திரு பெருமாள் சேர்வை என்பவரின் மகன் நித்தியானந்தம் என்பவர் நான்கு சக்கர வாகனத்தில் மானாமதுரையிலிருந்து பரமக்குடிக்கு சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்த நித்தியானந்தம் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த விபத்தில் வாகன ஓட்டுநர் திரு சுரேஷ் என்பவர் பலத்த காயமடைந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற எனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த நித்தியானந்தம் அவர்களின் குடும்பத்திற்கு மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு. சுரேஷ் அவர்களுக்கு 50,000/–ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை,
சென்னை-09